செ.வெ.எண்:13 நாள்: 07.10.2020

நாகப்பட்டினம் மாவட்டம்

**சீர்காழி நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்வுகளை மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.சி.முனியநாதன்,இ.ஆ.ப அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்வுகளை மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.சி.முனியநாதன்,இ.ஆ.ப அவர்கள் இன்று(07.10.2020) நேரில் சென்று பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன்.பி.நாயர்,இ.ஆ.ப அவர்கள், தனி அலுவலர்(மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கம்) திருமதி.இரா.லலிதா,இ.ஆ.ப, அவர்கள், மயிலாடுதுறை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு.ஸ்ரீநாதா,இ.கா.ப, ஆகியோர் உடனிருந்தனர்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி உட்கோட்டம், பாதிரக்குடி பகுதியில் நெடுஞ்சாலைத்துறை சார்பில், வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் புயல் மற்றும் சூராவளிக் காற்றினால் நெடுஞ்சாலையின் ஓரங்களில் உள்ள மரங்கள் திடீரென்று முறிந்து விழும்போது, சாலையில் பயணம் செய்வோர் அம்மரங்களை எவ்வாறு துரிதமா அப்புறப்புடுத்துவது என்பது குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒத்திகை நிகழ்வினையும் அது குறித்த செயல்விளக்கத்தினையும், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் பார்வையிட்டார்.

தொடர்ந்து, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், அரசூர் பகுதியில் மழை வெள்ளம் ஏந்படும்போது, நீரில் மூழ்கியவர்களை காப்பாற்றும் முறைகள் குறித்தும், பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய இதர தற்காப்பு நடவடிக்கைகள் குறித்தும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒத்திகை மற்றும் செயல்விளக்கத்தினை மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, சீர்காழி அரசு மருத்துவமனையில் கோவிட்-19 தொற்றால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான தனி வார்டுகளை பார்வையிட்ட மாவட்டக் கண்காணிப்பு அலுவலர், அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், நோய் எதிர்ப்பு சக்தியினை மேம்படுத்த வழங்கப்படும் உணவுகள் குறித்தும் சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில், வடகிழக்குப் பருவமழையின் போது, மீட்புப் பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தும் வண்ணம் தயார் நிலையில் உள்ள அதிக திறனுடைய மரம் அறுக்கும் இயந்திரங்கள், மணிக்கு 1 லட்சம் லிட்டர் நீர் இறைக்கக்கூடிய

டிராக்டரில் பொருத்தக்கூடிய மின் மோட்டார்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அவற்றின் இயங்கும் முறை குறித்த செயல் விளக்கத்தினை மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் பார்வையிட்டார்.

மழை வெள்ளத்தால் உடைப்புகள் ஏற்படின் அதனை சரிசெய்யும் வகையில் கொள்ளிடம் பயணியர் மாளிகை வளாகத்தில் தயார் நிலையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள மணல் மூட்டைகளை மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் பார்வையிட்டார்.

ஒத்திகை நிகழ்வுகளை பார்வையிட்டு, மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது,

" நேற்றைய தினம் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் வடகிழக்குப் பருவமழையின் போது, மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைள் குறித்து விவாதிக்கப்பட்டு, அவை தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. வட்ட அளவில் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள அனைத்துத்துறை அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாலைகளில் மரங்கள் விழும்போது, அவற்றை துரிதமாக அப்புறப்படுத்துவது குறித்தும், மழைநீர் தேங்கும் பகுதிகளிலிருந்து உடனடியாக நீரினை வெளியேற்றிடவும், வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை என தனித்தனியே பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இன்றைய தினம் பொதுமக்கள் பருவமழைக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தற்காப்பு நடவடிக்கைகள் குறித்து ஒத்திகை நிகழ்வுகள் நடைபெறுகின்றன. வெளிநாடுகளில் பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்குத் தேவையான தற்காப்பு நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தவறாது வழங்கப்பட்டு வருகின்றன. புயல், மழைக்காலங்களில் இப்பயிற்சிகள் மக்களுக்கு பேருதவியாக உள்ளது.

நம் நாட்டிலும் பொதுமக்களுக்கு இத்தகைய இயற்கைப் பேரிடர் மற்றும் விபத்துக் காலங்களில் எவ்வாறு தங்களை தற்காத்துக் கொள்வது என்பது குறித்து நடைமுறை அனுபவங்களும், பயிற்சி அனுபவங்களும் கிடைத்திடும் வகையில், தற்போது அரசு இதுபோன்று பல்வேறு பாதுகாப்பு மற்றும் தற்காப்பு ஒத்திகை நிகழ்வுகளை ஏற்பாடு செய்து பொதுமக்களுக்கு செயல்விளக்கங்களை வழங்கி வருகிறது.

இந்த ஒத்திகை மற்றும் பயிற்சி மாதிரிகளை பொதுமக்கள் நன்கு கவனித்து தெரிந்து வைத்துக் கொண்டால், பேரிடர் காலங்களில் தங்களுக்கும் பிறருக்கும் மிகவும் உதவியாக இருக்கும்." என தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.வ.மகாராணி, நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் திரு.இளம்வழுதி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.ஆசைத்தம்பி, வேளாண் பொறியியல்துறை தொழில்நுட்ப அலுவலர் திரு.பாலசுப்பிரமணியன், தீயணைப்பு நிலைய அலுவலர்கள் திரு.மோகிசன், திரு.ஜோதி, சீர்காழி வட்டாட்சியர் திருமதி.ஜி.ரமாதேவி, உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து இருந்தனர்.

**செய்திவெளியீடு: செய்திமக்கள் தொடர்புஅலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்**